1984 மார்ச் 21]

வனத்துறை சம்பந்தப்பட்ட நிலங்களில் இருக்கக்கூடிய பழங்குடி மக்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை நிலங்களை கையகப்படுத்தி வழங்கிக் கொண்டிருக்கும் அதே அளவில் ஆங்காங்கே நிலங்களை கையகப்படுத்தி வழங்குவதோடு, அரசு நிலங்கள் இருக்கக்கூடிய இடங்களையும் எடுத்து அசைன் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பழங்குடி மக்களைப் பொறுத்த வரையில் உள்ள பிரச்சினையை, அவர்கள் நிலையை உணர்ந்து பார்த்து, அரசு இதுவரையில் அவர்கள்மீது எந்த அளவுக்கு பரிவுடன் இருக்கிறதோ, அதே அளவிற்கு வருங்காலத்திலும் தொடர்ந்து இருக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் இரண்டு கோடி ரூபாய்தான் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். 2,000 கோடிக்கு மேலாக வரும் தமிழகத்தின் வருமானத்தில் இந்த ஏழை எளிய மக்களுக்கு 2 கோடி ஒதுக்குவது போதாது, அதைக் கொஞ்சம் மறுபரிசீலனை செய்து 5 கோடி ரூபாயாக உயர்த்துவதற்கு வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் அரசினுடைய நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மேலும் உதவ நடவடிக்கை எடுக்க அரசு பரிவோடு அதனைப் பரிசீலனை செய்யும்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்குப் உதவித் தொகை அளிக்கும் திட்டம்.

370—(* வினா எண் 4537—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு அரசு உதவித் தொகை அளிக்கும் திட்டம் கைவிடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன ?

(இ) மேற்படி ஆசிரியர் பயிற்சியில் பயிலும் ஆசிரியர், ஆசிரியைகள் அரசிற்குத் தங்கள் குறைகளைத் தீர்க்கக் கோரிக்கைகள் ஏதும் அனுப்பியுள்ளனரா—

(ஈ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்த காலத்தில் ஆசிரியர் பயிற்சிக்கு அதிக எண்ணிக்கையில் வந்து சேர்வதற்காக மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு உதவித் தொகை அளித்து வந்தது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பற்றாக் குறை நீங்கி வேலையற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியபோது ஆசிரியர்கள் பயிற்சிக்கு உதவித் தொகை அளித்து ஊக்குவிக்க வேண்டிய அவசியம் இல்லாததால் 1973-74-ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது.

(இ) ஆம்.

(ஈ) இக்கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவைகள் நிராகரிக்கப்பட்டு விட்டன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் அதிகமாக பயிற்சி பெற்று சர்பிளஸ்ஸாக இருக்கின்ற காரணத்தால், இந்த ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி உதவி தொ நிறுத்தப்படும் என்றால் இப்போது ஆங்காங்கு தனியார் நடத்திக் கொண்டிருக்கிறார்களே, அங்கே ஏழைகள் சேரும்போது, பணம் கட்டி படிக்க முடியுமா என்று அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்த்தார்களா? இன்றைக்கு ஆசிரியர்கள் சர்ப்பிளசாக இருக்கின்ற காரணத்தினால், ஒவ்வொரு ஊரிலும், 30 குழந்தைகளுக்கு குறையாமல் இருக்கின்ற ஊர்களில், நர்சரி பள்ளிகளை ஏற்படுத்தி, இந்த ஆசிரியர்களுடைய குறைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கக்கூடிய வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதைப் பயன்படுத்தி ஏழை எளியவர்கள் படிக்கலாம். மற்றபடி ஊக்குவிக்கின்ற தொகையாக உதவித் தொகை தருவதற்கில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்ப்பிளசாக இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு மீண்டும் உத்தியோகம், — வேலை வாய்ப்பு கொடுக்கின்ற அளவிலே நர்சரி பள்ளிகளை அதிமாக ஆரம்பித்து 10, 15 ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சியைப் படித்துவிட்டு, வீட்டிலே இருக்கிற அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் திட்டங்கள் ஏதாவது வகுக்கப்படுமா என்று அறிய நான் விரும்புகிறேன்.

1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்காக புதிய பணி இடங்களை தோற்றுவித்து வருகிறோம். ஆசிரியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்று விலகுகின்ற இடங்களில் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். நர்சரி பள்ளிகளை ஆரம்பித்து, அதிலே அவர்களைப் போடவேண்டும் என்று சொல்வது சரியாக இருக்காது. காரணம், அவர்களுக்குத் தருகின்ற பயிற்சி வேறு ; நர்சரி பள்ளிகளிலே சொல்லிக் கொடுப்பதற்குக் கொடுக்கின்ற ஆசிரியர் பயிற்சி வேறு.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி பெறக்கூடியவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுவதை நிறுத்தி விட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படிப் பார்த்தால், இன்றைக்குப் பல்வேறு துறைகளில் படித்துவிட்டு, வேலையில்லாமல் இருக்கிறார்கள். கல்வியிலும் இன்னும் பொறியியல் துறைகளிலும் இருக்கின்றவர்களுக்கு நாம் உதவித் தொகை கொடுப்பதை நிறுத்த முடியுமா? ஆகவே ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற பயிற்சி உதவித் தொகையை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் உதவித் தொகை என்பதை எந்தப் பொருளிலே நினைத்துக் கொண்டு பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே சொல்லப்படுகின்ற உதவித் தொகை என்பது ஸ்டைஃபன்ட் என்ற பெயரில் எல்லா மாணவர்களுக்கும் ஒரு தொகை தருவது. அப்படி மற்ற கல்விக்கு நாம் தருவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே. அப்படிப்பட்ட நிலைமைகள் கூடாது என்றுதான் நாம் இப்பொழுது இதில் முடிவெடுத்திருக்கிறோம். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தரப்படுகின்ற ஸ்காலர்ஷிப் போன்றவைகள் இருக்கின்றன. அது இந்த ஆசிரியர் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கும் தரப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

371—

1982 ஆம் ஆண்டு முடிய தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை.

*வினா எண். 19268—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் ஆண்டு முடிய தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களில் வேலையின்றி இருப்போர் எத்தனை ?

(இ) இவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?